*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை - 4*
*29 11 2025 SATURDAY 6 45 AM*
*வணக்கம் - மாநில செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

- *வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள Ditwah புயல் வடக்கு – வடமேற்கு திசையில் நகர்ந்து, நாளை வடதமிழகத்தை நெருங்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*
- *புயல் மற்றும் கனமழை காரணமாக, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*
- *உள்நாட்டு பாதுகாப்பை வலுப்படுத்த மத்திய அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.*
- *சொத்துவரி உயர்வு, மின்கட்டண உயர்வு உள்ளிட்டவற்றால் பொதுமக்கள் திமுக அரசு மீது கடும் கோபத்தில் உள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.*
- *உலக கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியில் இந்தியா 7-0 என்ற கோல்கணக்கில் சிலியை வென்றது.*

*>>>>><<<<<*

*வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள Ditwah புயல் வடக்கு – வடமேற்கு திசையில் நகர்ந்து வருகிறது.*

*இது, தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளை கடந்து, நாளை அதிகாலை தமிழகத்தின் வட கடலோர பகுதியை நெருங்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*இந்த புயல் காரணமாக தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் கன முதல் மிக கனமழையும், சில இடங்களில் அதி கனமழையும் பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை மற்றும் புதுச்சேரியின் ஒரு சில பகுதிகளில் இன்று, கன முதல் மிக கனமழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், அரியலூர், பெரம்பலூர், திருச்சி, சேலம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர், ராணிப்பேட்டை மாவட்டங்களில் மிக கனமழையும், வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, நாமக்கல் கரூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

*கடலோர பகுதிகளில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*தமிழகத்தில் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு, மாநில பேரிடர் மீட்புப் படைகளும், தேசிய பேரிடர் மீட்புப்படைகளும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.*

*இந்நிலையில், Ditwah புயல் காரணமாக, நாகை மாவட்டத்தில் கனமழை பெய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் – ஜெபராஜ் 50 செகண்ட்ஸ்)*

*Ditwah புயல் மற்றும் கனமழை எச்சரிக்கை காரணமாக, சென்னை விமான நிலையத்திலிருந்து இன்று புறப்படும் மற்றும் வருகை தரும் 54 விமானங்களின் சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது.*

*மதுரை, திருச்சி, தூத்துக்குடி, சேலம், பெங்களூர், ஹைதராபாத், இலங்கையில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்குச் செல்லும் விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இதற்கிடையே, செங்கற்பட்டு மாவட்டத்தில் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மாவட்டம் முழுவதும் 280 பாதுகாப்பு மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.*

*தேசிய பேரிடர் மற்றும் மாநில பேரிடர் மீட்பு குழுக்கள் தாம்பரம் மற்றும் கூடுவாஞ்சேரி பகுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.*

*விழுப்புரம் மாவட்டத்தில் மீட்புப் பணிகளுக்காக படகுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு. ஷேக் அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.*

*(சவுண்ட் பைட் – ஆட்சியர் 50 செகண்ட்ஸ்)*

*மழை முன்னெச்சரிக்கை காரணமாக கடலூர், கள்ளக்குறிச்சி, திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில் பள்ளி கல்லூரிகளுக்கும், விழுப்புரம் மாவட்டத்தில் பள்ளிகளுக்கும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.*

*புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகம் இன்று நடத்தவிருந்த இளநிலை மற்றும் முதுநிலை தேர்வுகள் அனைத்தும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

இந்நிலையில் சென்னை பெருநகரப் பகுதியில் வடகிழக்கு பருவமழை மற்றும் டிட்வா புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக மாநகராட்சி தெரிவித்துள்ளது.

மீட்புப் பணிகளுக்காக 36 படகுகள், 5 தேசிய பேரிடர் மீட்புக்குழுக்கள் மற்றும் 3 மாநில பேரிடர் மீட்புக்குழுக்கள் தயார் நிலையில் உள்ளன என்றும் மாநகராட்சி தெரிவித்துள்ளது.

சென்னையில் பாதிக்கப்பட்டவர்களைத் தங்கவைக்க 215 நிவாரண மையங்களும், உணவளிக்க 111 சமையல் கூடங்களும் தயார் நிலையில் உள்ளதாகவும் அது கூறியுள்ளது.

டிட்வா புயலைக் கருத்தில் கொண்டு மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்றும், பொதுமக்கள் அநாவசியமாக வெளியே சுற்றுவதைத் தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அவசர உதவிக்கு மாநகராட்சியின் 1913 என்ற எண்ணை 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம் என்றும் சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

உள்நாட்டு பாதுகாப்பை வலுப்படுத்த மத்திய அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சத்திஷ்கர் மாநிலம், ராய்ப்பூரில் நேற்று நடைபெற்ற மாநில காவல்துறை தலைமை இயக்குநர்களின் அகில இந்தியா மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசிய அவர், நக்ஸலைட் தீவிரவாதத்திற்கு எதிராக மத்திய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் வெற்றி பெற்றுள்ளதாக கூறினார்.

நக்ஸல் தீவிரவாத பாதிப்பால், 126 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருந்ததாகவும், கடந்த பத்தாண்டுகளில் அரசு மேற்கொண்ட தொடர்ச்சியான நடவடிக்கை காரணமாக, அந்த மாவட்டங்களின் எண்ணிக்கை 11ஆக குறைந்துள்ளதாக தெரிவித்தார்.

ஜம்மு கஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் நிலவிய பிரச்சினைகளுக்கும், மத்திய அரசு தீர்வு கண்டுள்ளதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

தேசிய புலனாய்வு முகமை வலுப்படுத்தப்பட்டுள்ளதையும், சட்டவிரோத செயல்கள் தடுப்புச் சட்டம் கடுமையாக்கப்பட்டுள்ளதையும் திரு. அமித் ஷா சுட்டிக்காட்டினார்.

>>>>><<<<<

சொத்துவரி உயர்வு, மின்கட்டண உயர்வு உள்ளிட்டவற்றால் பொதுமக்கள் திமுக அரசு மீது கடும் கோபத்தில் உள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலில் இதற்கு பொதுமக்கள் நல்ல தீர்ப்பு வழங்குவார்கள் என்று கூறினார்.

குறுவை சாகுபடியின் போது, மழையால் நெல் நனைந்து, பாதிக்கப்பட்டபோது விவசாயிகளுக்கு போதுமான நிவாரணத்தை மாநில அரசு வழங்கவில்லை என்றும் அவர் குறை கூறினார்.

பருவமழை தொடங்குவதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டிருக்க வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டின், அடுத்த மாதம் இந்தியா வரவுள்ள நிலையில், இருநாடுகளின் நிபுணர்கள் அடங்கிய குழுவினர் தில்லியில் நேற்று ஆலோசனை நடத்தினர்.

>>>>><<<<<

இலங்கைக்கான இந்திய தூதர் திரு. சந்தோஷ் ஜா, புதுதில்லியில் நேற்று ராணுவ தலைமைத் தளபதி ஜென்ரல் உபேந்திர துவிவேதியை சந்தித்து பேசினார்.

>>>>><<<<<

மேற்குவங்க மாநிலம், முர்ஸிதாபாதில் சட்டவிரோதமாக தங்கியிருந்த பங்களாதேஷைச் சேர்ந்த 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

>>>>><<<<<

கோவை - ராஜஸ்தான் மாநிலம் மாதார் இடையே இயக்கப்படும் ரயில் சேவை நீட்டிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

சேலம் மாநகரப் பகுதியில் 10 புதியவகை பேருந்துகளை, சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன் நேற்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் கார்த்திகை தீபம் ஏற்றுவது தொடர்பான வழக்கில், தீர்ப்பை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை ஒத்தி வைத்துள்ளது.

>>>>><<<<<

தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிளை ஆட்சியர் திரு. சதிஷ் நேற்று ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

திருவள்ளூர் மாவட்டம், பூண்டி நீர்த்தேக்கத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு. கார்த்திகேயன் நேற்று ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியில் இந்தியா தனது முதல் போட்டியில் வெற்றிபெற்றுள்ளது.

சென்னையில் நேற்று நடைபெற்ற இந்த போட்டியில், இந்தியா 7-0 என்ற கோல்கணக்கில் சிலியை வென்றது.

>>>>><<<<<

அஹமதாபாதில் நேற்று நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கால்பந்து சாம்பியன் தகுதிப் போட்டியில், இந்தியா 2-0 என்ற கோல்கணக்கில் லெபனானை வென்றது.

>>>>><<<<<

லக்னோவில் நடைபெற்று வரும் சையத் மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் இன்று மஞ்சுநாத்தை எதிர்கொள்கிறார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் தன்வி சர்மா – ஜப்பானின் Akechi-யை எதிர்கொள்கிறார்.

மற்றொரு அரையிறுதிப் போட்டியில் Unnati Hooda, துருக்கியின் Neslihan Arin-ஐ எதிர்கொள்கிறார்.

மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் Treesa Jolly-Gayathri இணை, மலேசியாவின் Yee Ong – Carmen Teing இணையை எதிர்கொள்கிறது.

*கலப்பு இரட்டையர் அரையிறுதியில் ஹரிஹரன் அம்சகருணன் - Treesa Jolly இணை, இந்தோனேஷியாவின் Dejan Ferdinansyah – Wardana இணையை எதிர்கொள்கிறது.*

*>>>>><<<<<*

*மகாபலிபுரத்தில் இன்று நடைபெறவுள்ள 20 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் நட்புணர்வு கால்பந்து போட்டியில், இந்தியா - உஸ்பெகிஸ்தானை எதிர்கொள்கிறது.*

*>>>>><<<<<*